செய்தி வெளியீடு எண்:193 நாள்: 28–2–2011

**செய்தி மக்கள் தொடர்புத்துறையின் நினைவகங்களில் பணியாற்றுவதற்கு நூலகர்/ காப்பாளர்களுக்கு பணி ஆணை மற்றும் திரைப்படத்துறையினர் நலவாரிய உறுப்பினர்களுக்கு நலதிட்ட நிதி உதவிகளை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் இன்று (28–2–2011) வழங்கினார்.**

- நாட்டின் விடுதலைப் போரில் ஈடுபட்டு தன்னுயிரை துச்சமென மதித்து தியாகங்கள் பல புரிந்த தியாகச் செம்மல்களையும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகவும், உரிமைக்காகவும் வாழ்க்கையை அர்ப்பணித்த தமிழ்ச் சான்றோர்களையும் இளைய சமுதாயத்தினர் என்றென்றும் நெஞ்சில் நிறுத்தி போற்றி, இலட்சியப்பாதையில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளத்தூண்டும் வகையில் அவர்களின் நினைவாகவும், அவர்களைப் பற்றி வருங்கால சந்ததியினர் அறிந்து போற்றிடும் வகையிலும், தமிழ்நாடு அரசு, அவர்களின் நினைவாக 50 நினைவகங்கள், 3 அரங்கங்கள், 5 நினைவுத் தூண்கள் மற்றும் ஒரு நினைவுப் பூங்கா ஆகியன செய்தி மக்கள் தொடர்புத் துறையால் உருவாக்கப்பட்டு பேணி பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

- இந்நிலையில் இதுவரை பணியிடம் தோற்றுவிக்கப்படாத 25 நினைவகங்களில் பொதுமக்கள் தலைவர்களை அறிந்துக் கொள்ள ஏதுவாக அவர்களின் வாழ்க்கை வரலாற்று குறிப்புகள் மற்றும் அவர்கள் நாட்டுக்காக ஆற்றிய தொண்டுகள் குறித்த விவரங்கள் அடங்கிய புத்தகங்களை அங்கு வைத்தும், அந்நினைவகங்களில் ''நூலகர் மற்றும் காப்பாளர்'' (Librarian cum Caretaker) என்ற பணியிடங்கள் புதியதாக தோற்றுவித்தும் அவர்களையே அந்தந்த நினைவகங்களுக்கு பாதுகாவலர்களாகவும்

நியமனம் செய்து, அவ்வாறு பணியிடங்களை தோற்றுவிப்பதால் ஏற்படும் செலவினம் ஒரு ஆண்டிற்கு தோராயமாக ரூ. 14,49,000/– க்கு நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

- மேற்கண்ட ஆணையின் அடிப்படையில், முதற்கட்டமாக 17 நினைவகங்களுக்கு பணியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு அப்பணியாளர்களுக்கு நியமன ஆணை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்களால் இன்று (28–02–2011) வழங்கப்பட்டது.

**திரைப்படத் துறையினர் நல வாரியம்**

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 09–10–2009 அன்று அகில இந்திய திரைப்பட தொழிலாளர்கள் மாநாட்டில் உரையாற்றியபோது தொழிலாளர் சமுதாயத்தின் நலன்களை உறுதிப்படுத்திடும் வகையில், அரசின் சார்பில் பல்வேறு அமைப்பு சாரா தொழிலாளர்கள் நலவாரியங்கள் உருவாக்கப்பட்டு, அந்த வாரியங்களின் மூலம் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில், தமிழ் திரையுலக வளர்ச்சியிலும் அதன் வாழ்விலும் பல்வேறு நிலைகளில் தங்கள் உழைப்பை நாளும் அளித்திடும் கலையுலகத்தினர் நலன்களுக்காக தனி வாரியம் அமைக்கப்பட வேண்டுமன தென்னிந்திய நடிகர் சங்கத்தின் சார்பிலும் தமிழ் திரையுலகத்தின் சார்பில் அளிக்கப்பட்டுள்ள கோரிக்கையினை ஏற்று தமிழக அரசு சின்னத்திரையினருக்கும் சேர்த்து திரைப்படத்துறையினர் நலவாரியம் ஒன்றினை புதிதாக உருவாக்கப்படும் என அறிவித்ததைத் தொடர்ந்து திரைப்படத் துறையினர் நலவாரியம் தொடங்கப்பட்டது. அதன்படி திரைப்படத் துறையினர் நலவாரியத்தில் இதுவரை 18500 (பதினெட்டாயிரத்து ஐநூறு ) உறுப்பினர்கள் பதிவு செய்து உள்ளனர். பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு விபத்து ஈட்டுறுதி திட்டம், இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை, ஈமச்சடங்கு உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு

உதவித்தொகை, கருச்சிதைவு, கருக்கலைப்பு உதவித்தொகை, மூக்குக்கண்ணாடி செலவுத்தொகை, போன்ற இனங்களுக்கு உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

- இதனைத் தொடர்ந்து முதற்கட்டமாக 6 உறுப்பினர்களுக்கு திருமண உதவித்தொகை ரூ.12,000/–, 18 உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு கல்வி உதவித்தொகை ரூ. 30,500/–, இயற்கை மரணமடைந்த 9 உறுப்பினர்களின் குடும்பத்திற்கு ரூ. 1,53,000/–ம், கண்கண்ணாடி செலவுத்தொகையாக 5 நபர்களுக்கு ரூ. 2,500/– ஆக மொத்தம் ரூ.1,98,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து தொண்ணூற்று எட்டு ஆயிரம் மட்டும் )–க்கான நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் இன்று (28–02–2011) வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள், மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு. ரா.சிவகுமார், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் டாக்டர் கே.எஸ். பழனிசாமி, இ.ஆ.ப., தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கத்தலைவர் திரு. இராமநாராயணன், செயலாளர், திரு. டி.சிவசக்தி பாண்டியன், தென்னிந்திய திரைப்பட தொழிலாளர்கள் சம்மேளனத்தின் தலைவர் திரு. வி.சி. குகநாதன், சின்னத்திரை கலைஞர்கள் கூட்டமைப்பின் தலைவர் திரு. விடுதலை ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

வெளியீடு –<br>
செய்தி மக்கள் தொடர்புத்துறை,<br>
சென்னை–9